தினமணி

கரும்பு டன்னுக்கு ரூ.3,500 வழங்க வேண்டும்: விவசாயிகள் வலியுறுத்தல்

First Published : 30 Jul 2012 10:42:30 AM IST

கள்ளக்குறிச்சி, ஜூலை 29: தமிழ்நாடு கரும்பு விவசாயிகள் சங்கம் சார்பில் மாநில கோரிக்கை மாநாடு கள்ளக்குறிச்சியில் அண்மையில் நடைபெற்றது.

மாநிலத் தலைவர் என்.பழனிச்சாமி தலைமை வகித்தார். மாவட்டத் தலைவர் ஏ.வி.ஸ்டாலின்மணி வரவேற்றார். மாநில பொருளாளர் எம்.சின்னப்பா சங்க கொடியினை ஏற்றி வைத்தார்.

தீர்மானங்கள்: கூட்டுறவு ஆலைகளில் நஷ்டம் ஏற்படுவது குறித்து விசாரணை நடத்த வேணடும். தனியார் ஆலைகள் லாபத்தில் இயங்கும் போது கூட்டுறவு ஆலைகள் ரூ.1400 கோடிக்கு மேல் கடனில் உள்ளது.

÷மதுராந்தகம் கூட்டுறவு சர்க்கரை ஆலை நஷ்டம் குறித்து விசாரணைக் குழு அமைத்து விசாரித்தது போல் மற்ற ஆலைகளிலும் விசாரணை நடத்தப்பட வேண்டும். நஷ்டத்திற்குப் பொறுப்பானவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். ரூ.1400 கோடி கடனை ரத்து செய்திட வேண்டும்.

கூட்டுறவு, பொதுத்துறை ஆலைகளில் நிர்வாகச் சீர்கேடுகளை களைந்து முறைப்படுத்திட வேண்டும். விவசாயிகளும், நிர்வாகத்தில் பங்கு பெறும் வகையில் தேர்தல் நடத்தி விவசாய பிரதிநிதிகளைத் தேர்வு செய்திட வேண்டும்.

கூட்டுறவு ஆலைகளின் கரும்பு பகுதிகளைத் தனியார் ஆலைகளிடம் ஒப்படைத்ததை திரும்பப் பெற வேண்டும். மதுரா ஆலையின் கரும்புப் பகுதிகளை தனியார் ஆலையிடம் ஒப்படைத்திடும் முயற்சியைக் கைவிட வேண்டும்.

ஆலைகளின் லாபத்தை அதிகப்படுத்த இணை மின்சாரம், எத்தனால் உள்பட உப பொருள்களைத் தயாரிக்க வேண்டும். ஆலைகளின் அறவைத் திறனை உயர்த்திட வேண்டும்.

கருப்பு விவசாயிகளுக்கும், நுகர்வோருக்கும் ஓரளவு பாதுகாப்பைத் தரும் கரும்புக் கட்டுப்பாடு சட்டத்தை ரத்து செய்ய முயற்சிப்பதை மத்திய அரசு கைவிட வேண்டும்.

5ஏ விதிப்படி சர்க்கரையை விற்று வரும் லாபத்தில் விவசாயிகளுக்கு பங்கு தருவதை மீண்டும் அமல்படுத்த வேண்டும்.

சர்க்கரை உற்பத்தியை மட்டுமே கணக்கிட்டு கரும்பு விலை தீர்மானிக்கப்படுகிறது. உப பொருட்களான எத்தனால், மொலாசஸ், மின்சாரம், உரம் இவைகளை விற்று வரும் லாபத்தையும் கணக்கிட்டு கரும்பு விலையைத் தீர்மானித்திட சட்டத் திருத்தம் செய்ய வேணடும். வெட்டுக் கூலியை ஆலை நிர்வாகமே ஏற்றுக் கொள்ள வேண்டும்.

ஒரு டன் கரும்புக்கு ரூ.3 ஆயிரத்து 500 விலை வழங்கிட வேண்டும். கூட்டுறவு அரசு ஆலைகளில் மின்உற்பத்தி தொடங்குவதற்காக விவசாயிகளிடம் பணம் பிடித்தம் செய்தும், அரசு நிதி ஒதுக்கியும் இப்பணி இன்னும் நிறைவடையவில்லை. விரைவாக பணியை முடித்து மின் உற்பத்தியை துவக்கிட வேண்டும் என்பன போன்ற தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

தமிழ்நாடு கரும்பு விவசாயிகள் சங்க மாநிலத் தலைவர் எம்எல்ஏ கே.பாலகிருஷ்ணன் நிறைவுரை ஆற்றினார். மாநில செயலாளர் டி.ரவீந்திரன் அறிக்கை வாசித்தார். ஈரோடு மாவட்ட அனைத்து விவசாயிகள் சங்கத் தலைவர் பி.சாசியண்ணன், தமிழக விவசாயிகள் சங்க மாநிலத் தலைவர் அ.சின்னசாமி, மாவட்ட சிறப்புத் தலைவர் எம்.எல்.ஏ ஆர்.ராமமூர்த்தி ஆகியோர் பேசினர்.

தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாநில துணைத் தலைவர் கே.ராஜ்குமார், கூட்டுறவு சர்க்கரை ஆலைகள் விவசாய சங்கத் தலைவர் எஸ்.தனபால் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

## அதிக லாபம் பெற நீண்டஇழை பருத்தி சாகுபடி செய்ய ஆலோசனை

First Published : 30 Jul 2012 12:57:44 PM IST

பெரம்பலூர், ஜூலை 29: பெரம்பலூர் மாவட்டத்தில் பருத்தி சாகுபடி செய்யும் விவசாயிகள், அதிக லாபம் பெற மிக நீண்ட இழை பருத்தி சாகுபடி செய்யலாம் என்றார் ஹேன்ஸ் ரோவர் வேளாண் அறிவியல் மைய திட்ட ஒருங்கிணைப்பாளர் இரா. மாரிமுத்து.

இதுகுறித்து அவர் வெளியிட்ட செய்திக்குறிப்பு: பெரம்பலூர் மாவட்ட பருத்தி விவசாயிகள் பெரும்பாலானோர், அதிகளவில் நடுத்தர இழை பி.டி.பருத்தி ரகங்களை பயிரிடுகின்றனர். ஆனால், மிக நீண்ட இழை பி.டி.பருத்தி ரகங்கள் ஒரு சில பகுதிகளில் மட்டும் மிகக் குறைந்த அளவே பயிரிடப்படுகின்றன. சில ஆண்டுகளுக்கு முன் பி.டி.பருத்தி அல்லாத, நீண்ட இழை பருத்தி ரகங்களான சுவின், எல்.ஆர்.ஏ ஆகியவற்றை பயரிட்ட விவசாயிகள் அதிக நிகர வருமானம் பெற்றனர். இதேபோல, பி.டி. பருத்தியிலும் மிக நீண்ட இழை ரகங்களை பயிரிட்டு நவீன தொழில் நுட்பங்களை பயன்படுத்தும்போது, அதிகளவில் நிகர வருமானம் பெற முடியும். மிக நீண்ட இழை பி.டி. பருத்தி ரகங்களை வரிசைக்கு வரிசை 5 அடி இடைவெளியும், செடிக்கு செடி 1.5 அடி இடைவெளியும் விட்டு, சாலை நடவு முறையில் நடவு செய்யும்போது ஒரு ஹெக்டேருக்கு 18700 செடிகள் என்ற அளவில் செடிகளின் எண்ணிக்கை அமைவதோடு மட்டுமின்றி, இந்த முறையில் களையெடுப்பது மாட்டு உழவின் மூலமாக, பருத்தியில் களையெடுக்கும் கருவியான குபேட்டா மூலமாக அல்லது, டிராக்டர் கொண்டு

களையெடுக்கலாம். பருத்தி செடியில் 100-110 நாள்களில் 18-21 கணு உள்ள நிலையில் பருத்தி செடியின் நுனியை 10 செ.மீ அளவில் கிள்ளி விடும் போது, பக்க கிளைகள் வரிசையின் இடைவெளியான 5 அடியில் படர்ந்து, அதாவது ஒரு செடியில் சராசரியாக 160- 185 காய்களுடன் நல்ல தரமான பஞ்சினை பெற முடியும்.

அறுவடை முடிவில், ஒரு ஹெக்டேருக்கு சராசரியாக 45 -50 குவிண்டால் மகசூலும், நிகர வருமானமாக ஒரு ஏக்கருக்கு ரூ. 31,000 பெற முடியும். ஆனால், தற்பொழுது விவசாயிகள் பயன்படுத்தும் 4-3 என்ற இடைவெளியில் நடவு செய்யும் போது ஒரு ஹெக்டேருக்கு 9,600 செடிகளின் எண்ணிக்கை காணப்பட்டு ஒரு ஏக்கருக்கு 8 முதல் 10 குவிண்டால் வரையில் மகசூல் பெறப்படுகிறது.

இதன் மூலம் கிடைக்கும் நிகர வருமானமும் ஏக்கருக்கு ரூ. 15,000 வரையே உள்ளது.

எனவே, பெரம்பலூர் மாவட்டத்தில் மானாவாரி பருவத்தில் பயிரிடும் அனைத்து விவசாயிகளும், 5-1. 5 அல்லது 5-2 என்ற இடைவெளியில் வரிசை நடவு முறையில் பி.டி. பருத்தியை நடவு செய்தால், அதிக மகசூலுடன் கூடுதல் வருமானம் பெறலாம். இதுதொடர்பான விவரங்களுக்கு, ஹேன்ஸ் ரோவர் வேளாண் அறிவியல் மையத்தை 04328-293251, 293592 ஆகிய தொலைபேசி எண்களிலும், திட்ட முதுநிலை ஆராய்ச்சியாளர் பி. சரவணனை (9944244532) தொடர்பு கொண்டு பயன் பெறலாம் என்றார் அவர்.

---

தினமலர்
உண்மையின் உரைகல்

**மத்திய பிரதேசம், மகாராஷ்டிரா பங்களிப்பால்... நாட்டின் சோயா சாகுபடி 138 லட்சம் ஹெக்டேராக உயர்வு**

ஜூலை 30,2012,23:50



- பிசினஸ் ஸ்டாண்டர்ட் உடன் இணைந்து -நடப்பு கரீப் பருவத்தில், மத்திய பிரதேசம் மற்றும் மகாராஷ்டிரா மாநிலங்களில், போதிய அளவிற்கு பருவ மழை பெய்துள்ளதை அடுத்து, சோயா பயிரிடும் பரப்பளவு அதிகரித்துள்ளதாக, மத்திய வேளாண் அமைச்சகம் வெளியிட்டுள்ள புள்ளி விவரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.நிலக்கடலைஅமைச்சகத்தின் இந்த விவரத்தின் படி, நாடு தழுவிய அளவில், கடந்த வார இறுதி நிலவரப்படி, 138.33 லட்சம் ஹெக்டேரில் சோயா விதைப்பு பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. இது, கடந்த ஆண்டின் இதே காலத்தை விட, 3 சதவீதம் அதிகமாகும். இதையடுத்து, ஒட்டுமொத்த அளவில் எண்ணெய் வித்துக்கள் சாகுபடி பரப்பளவு அதிகரிக்கும், என எதிர்பார்க்கப்படுகிறது.இருப்பினும், குஜராத் மாநிலத்தில், மழை குறைவால் நிலக்கடலை சாகுபடியில் விறுவிறுப்பு ஏற்படவில்லை. இதை ஈடுசெய்யும் வகையில், மத்திய பிரதேசம் மற்றும் மகாராஷ்டிரா மாநிலங்களில், சென்ற வார இறுதி நிலவரப்படி, 14-15 லட்சம் ஹெக்டேரில், சோயா விதைப்பு பணி நடைபெற்றுள்ளது. பொதுவாக கரீப் பருவத்தில், வட மாநிலங்களில் சோயா மற்றும் நிலக்கடலை ஆகிய, எண்ணெய் வித்துக்களே அதிகளவில் சாகுபடி செய்யப்படுகின்றன.பருப்பு வகைகள்போதியளவிற்கு, தென் மேற்கு பருவ மழை இல்லாததால், பருப்பு வகைகள் உள்ளிட்ட இதர தானியங்களின், சாகுபடி பரப்பளவு, கடந்த ஆண்டை விட குறைவாகவே உள்ளது. இருப்பினும், கடந்த வாரத்தில் ஒரு சில, தென்மேற்கு மாநிலங்களில் உள்ள மாவட்டங்களில், மழை அதிகரித்துள்ளது. இதனால், மேற்கண்ட தானியங்களின் விதைப்பு பணி, தீவிரமடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.இதுகுறித்து வேளாண் பொருளாதார நிபுணர் ஒருவர் கூறுகையில், "கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில், ஜூலை மாதம் வரையில், 20-22 சதவீத அளவிற்கு, மழைப்பொழிவு குறைந்துள்ளது. மற்ற தானியங்களை விட, பருப்பு வகைகள் உற்பத்தி குறைந்தால் தான், அது பாதிப்பை ஏற்படுத்தும் என்று தெரிவித்தார்.நெல் சாகுபடிமற்ற மாநிலங்களுடன் ஒப்பிடும் போது,மேற்கு வங்கத்தில், மழைப்பொழிவு நன்கு உள்ளது. இதையடுத்து, அம்மாநிலத்தில், இதுவரையிலுமாக, ஏழு லட்சம் ஹெக்டேரில் நெல் விதைப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும், நாடு தழுவிய அளவில், நடப்பு கரீப் பருவத்தில் 191 லட்சம் ஹெக்டேரில் நெல் சாகுபடி மேற்கொள்ளப்பட்டிருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது.மேலும், நாடு தழுவிய அளவில், 97.24 லட்சம் ஹெக்டேரில், பருத்தி விதைப்பு பணியும், 7,000 ஹெக்டேரில் சணல் சாகுபடியும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இவை, எப்போதும் மேற்கொள்ளப்படும் அளவை விட அதிகமாகும்.கரும்புமதிப்பீட்டு காலத்தில், நாடு தழுவிய அளவில், கரும்பு பயிரிடும் பரப்பளவு 52.85 ஹெக்டேராகவும், பருப்பு வகைகள் பயிரிடும் பரப்பளவு 62.99 லட்சம் ஹெக்டேராகவும் உள்ளன. மேலும், இதர தானியங்கள், 138.33 லட்சம் ஹெக்டேரில், பயிரிடப்பட்டிருக்கும் என, மதிப்பிடப்பட்டுள்ளது."வரும் நாட்களில், பருவமழை பொழிவில் முன்னேற்றம் இன்றி, இதே நிலை தொடரும்பட்சத்தில், நடப்பு 2012ம் ஆண்டில் மிகப் பெரிய வறட்சி ஏற்படும்' என தரக் குறியீட்டு நிறுவனமான கிரிசில் எச்சரிக்கை செய்துள்ளது. இதற்கு முன், கடந்த 2009ம் ஆண்டு, கடந்த 30 ஆண்டுகளில் இல்லாத அளவிற்கு, மிக அதிகமான

வறட்சியை நாடு சந்தித்தது என்பது குறிப்பிடத்தக்கது.

சாதனை அளவு

கடந்த வேளாண் பருவத்தில் (2011-12), நாட்டின் உணவு தானிய உற்பத்தி, சாதனை அளவாக, 25.74 கோடி டன்னை எட்டியுள்ளது என, மத்திய அரசின் நான்காவது மதிப்பீட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதில், நெல் உற்பத்தி, 10.43 கோடி டன்னாகவும், கோதுமை உற்பத்தி 9.39 கோடி டன்னாகவும், பருப்பு வகைகள் உற்பத்தி, 1.72 கோடி டன்னாகவும் உள்ளது. இவை தவிர, இதர தானியங்கள் உற்பத்தி 4.20 கோடி டன்னாகவும், எண்ணெய் வித்துக்கள் உற்பத்தி 3 கோடி டன்னாகவும், பருத்தி உற்பத்தி 3.52 கோடி டன்னாகவும் மற்றும் கரும்பு உற்பத்தி 35.77 கோடி டன்னாகவும் அதிகரித்துள்ளது என மதிப்பீட்டில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

## ஆடிப்பட்ட சாகுபடியை துவக்க விவசாயிகள் தயக்கம் : பருவமழை பொய்த்ததால் கடும் வறட்சி நிலை

பதிவு செய்த நாள் : ஜூலை 30,2012,21:35 IST

காஞ்சிபுரம் : தென்மேற்கு பருவ மழை பொய்த்து போனதால், ஆடிப் பட்டத்தில் சாகுபடி பணிகளை துவக்க விவசாயிகள் தயக்கம் காட்டி வருகின்றனர். கடந்த ஆண்டை விட, நடப்பாண்டில் 205.3 மி.மீ., என்ற அளவில் மழை பொழிவு குறைந்துள்ளதால், பெரும்பாலான ஏரிகள் வறண்டு விட்டன. ஏரிகளின் மாவட்டம் என்று பெருமை பெற்ற காஞ்சிபுரம் மாவட்டத்தின் விவசாயிகள், பாசனத்திற்கு ஏரிகளை மட்டுமே நம்பி உள்ளனர். மாவட்டத்தில், பொதுப்பணி துறை கட்டுப்பாட்டில் 1,002 ஏரிகளும், ஊராட்சி ஒன்றியங்களின் கட்டுப்பாட்டில் 940 ஏரிகளும் உள்ளன. தென்மேற்கு, வடகிழக்கு பருவ மழை காலங்களில், இந்த ஏரிகளில் மழை நீர் சேகரிக்கப்பட்டு, ஆண்டு முழுவதும் பாசனத்திற்கு பயன்படுத்தப்படும். பருவமழை குறைந்தது வடகிழக்கு பருவ மழையின்போது மட்டுமே அதிக மழை பொழிவு இருக்கும் என்றாலும், தென்மேற்கு பருவ மழையும் ஓரளவு கைகொடுக்கும். அப்போது, ஆடிப் பட்டத்தில் விவசாய பணிகளை துவக்கும் அளவிற்கு ஏரிகளுக்கும் தண்ணீர் வரத்து வரும். ஆனால், இந்த ஆண்டு, தென்மேற்கு பருவமழை குறைந்துவிட்டது. மாவட்டத்தில் ஜனவரி மாதத்திலிருந்து ஜூலை மாதம் வரை, சராசரி மழை அளவு 245.6 மி.மீ., ஆகும். கடந்த ஆண்டு 297.14 மி.மீ., மழை பதிவானது. ஆனால், இந்த ஆண்டு 91.8 மி.மீ., மழை மட்டுமே பெய்துள்ளது. ஏரிகள் வறண்டன மதுராந்தகம் ஏரி, தென்னேரி, தாமல் ஏரி, ஸ்ரீபெரும்புதூர் ஏரி, உத்திரமேரூர் ஏரி, மானாம்பதி ஏரி, கொளவாய் ஏரி, தையூர் ஏரி என, 17 ஏரிகள் பெரிய பாசன ஏரிகள் ஆகும். ஏரிகளில் தேங்கும் தண்ணீர், விவசாயத்திற்கு மட்டுமின்றி குடிநீர் ஆதாரமாகவும் திகழ்கிறது. விவசாயிகளுக்கும், பொதுமக்களுக்கும் பெரிதும் உதவியாக இருந்த ஏரிகள், பருவ மழை பொய்த்ததால், தற்போது

வறண்டு விட்டன. பணிகள் துவங்கவில்லை ஏரிகள் வறண்டதால், ஆடிப் பட்டத்தில், விவசாய பணிகளை துவக்குவதில் விவசாயிகள் தயக்கம் காட்டி வருகின்றனர். நீர்நிலைகளில் தண்ணீர் இல்லாததால், கால்நடை வளர்ப்பும் சவாலாகிவிட்டது. இது குறித்து, தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின், மாவட்ட தலைவர், நேரு கூறும்போது,""விவசாயிகள் ஆடி மாதம் துவக்கத்தில், நாற்று நட்டு விடுவர். தற்போது பருவமழை இல்லாததால், விவசாயிகள் இன்னமும் பணியை துவக்கவில்லை. ஏரிகள் வறண்டு கிடப்பதால், அவற்றை வேகமாக தூர் வாரி, கால்வாய்களை சீரமைக்க வேண்டும்,'' என்றார். வேளாண் துறை அதிகாரிகளும் இந்த கருத்தை ஆமோதித்தனர்.

கடந்த ஏழு ஆண்டுகள் மழை விவரம்(மி.மீ.,)
ஆண்டு ஜனவரி பிப்ரவரி மார்ச் ஏப்ரல் மே ஜூன் ஜூலை
2006 8.75 - 10.56 6.06 27.08 76.16 72.90
2007 - 5.03 - 10.38 21.30 68.04 136.93
2008 41.79 25.63 150.98 - 38.85 30.43 36.43
2009 13.14 - - - 29.40 23.94 68.70
2010 26.43 20.50 94.78 - 22.08 35.74 30.34
2011 - 36.15 - 63.26 25.91 24.35 147.47
2012 4.2 - - - - 30.8 56.8

**இறால் பண்ணைகளால் விவசாயம் பாதிப்பு :கலெக்டரிடம் பா.ஜ., புகார்**

பதிவு செய்த நாள் : ஜூலை 30,2012,21:29 IST

திருவள்ளூர் : விவசாயத்தை பாதிக்கும் இறால் பண்ணைகளை அகற்ற வேண்டும் எனக் கோரி விவசாயிகளுடன் பா.ஜ., மாநில துணைத் தலைவர் தமிழிசை சவுந்தர்ராஜன் கலெக்டரிடம் நேற்று புகார் அளித்தார். மீஞ்சூர் ஒன்றியம், தேவம்பட்டு, சேகண்யம், உப்புநெல்வாயல் உள்ளிட்ட, 10க்கும் மேற்பட்ட கிராமங்கள் உள்ளன. இக்கிராமங்களில், 15க்கும் மேற்பட்ட இறால் பண்ணைகள் உள்ளன. இங்கிருந்து வெளியேறும் கழிவுநீரால், அப்பகுதி முழுவதும் உவர்ப்பாக மாறி விடுகிறது. மழைக் காலங்களில், இந்த மழைநீருடன் உவர்ப்பு நீர் சேர்ந்து கால்வாய் வழியாக ஏரிகளில் தங்கி விடுகிறது. இதனால், ஏரியும் உவர்ப்பு தன்மையாக மாறி விடுகிறது. வயல்களுக்கு ஏரிகளில் இருந்து தண்ணீர் பாய்ச்சும் போது, உவர்ப்பு தன்மை வயல்வெளிகளில் தங்கி விடுகிறது.
இதன் காரணமாக, பயிர்கள் வளர்ச்சியடைவதில்லை. விளைச்சல் கடுமையாக பாதிப்படைந்து உள்ளது. மேற்கண்ட கிராமங்களில் உள்ள, 5,000 ஏக்கர் விவசாயத்தை பாதிக்கும், இறால்

பண்ணை அகற்ற வேண்டும் எனக் கோரி கிராம மக்களுடன், பா.ஜ., மாநிலத் தலைவர் தமிழிசை சவுந்தர்ராஜன் தலைமையில், திருவள்ளூர் கலெக்டர் அலுவலகம் வந்தனர். அலுவலகத்திற்கு வெளியில் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்திய பின்னர், கலெக்டர் ஆஷிஷ் சட்டர்ஜியிடம் கோரிக்கை மனு அளித்தனர். மனுவை பெற்றுக் கொண்ட கலெக்டர், இன்னும் இரண்டு வாரங்களுக்கு நடவடிக்கை எடுப்பதாக கூறினார்.

## சின்ன வெங்காய செடி வளர்ப்பில் விவசாயிகள்

பதிவு செய்த நாள் : ஜூலை 31,2012,05:52 IST

ஈரோடு: ஈரோட்டில் மழை பெய்யாததால், வெங்காயம் சாகுபடியில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர்.
பொய்த்துப் போன பருவமழையால், விளை நிலங்கள் வறட்சியின் பிடியில் சிக்கித் தவிக்கின்றன. இதனால், நெல், கரும்பு, மஞ்சளுக்கு மாற்றாக, காய்கறி பயிர்களை சாகுபடி செய்யும் முயற்சியில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர். சிலர் மஞ்சளில் ஊடுபயிராக, வெங்காயத்தை பயிர் செய்துள்ளனர். வறட்சியிலும், வெங்காயம் விளைச்சல் ஜோராராக உள்ளது.எம்.பி.பாளையம் விவசாயிகள் கூறியதாவது: ஈரோடு மாவட்டத்தில் சில ஆண்டுகளாக பருவம் மாறி, மழை பெய்கிறது. நடப்பாண்டு பருவமழை பொய்த்ததால், நீரின்றி விளைநிலங்கள் வறண்டுள்ளன. வெங்காயம் சாகுபடிக்கு குறைந்தளவு நீர் போதுமானது. எனவே, பல்லாயிரக் கணக்கான விவசாயிகள் வெங்காயத்தை சாகுபடி செய்கின்றனர்.பல விவசாயிகள் மஞ்சளுக்கு, ஊடுபயிராக வெங்காயத்தை விதைத்துள்ளனர். ஒரு கிலோ சிறிய வெங்காயம் கிலோ, 30 ரூபாய் வரை விற்பனையாகிறது. விவசாயமின்றி முடங்கிய நிலையில், விவசாயிகளுக்கு, வெங்காயம் விளைச்சல் ஓரளவுக்கு கை கொடுத்துள்ளது. இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர்.

## விவசாயிகளுக்கு தெளிப்பு நீர் பாசன கருவிகள்

பதிவு செய்த நாள் : ஜூலை 30,2012,23:13 IST

ஊட்டி : இரண்டாம் பசுமை புரட்சி திட்டத்தின் கீழ், சிறு, குறு விவசாயிகளுக்கு 52 லட்சம் ரூபாய் மதிப்பிலான இலவச தெளிப்பு நீர் பாசன கருவி வழங்கப்பட்டன.
ஊட்டி வட்டத்திற்கு உட்பட்ட கிராம ஊராட்சிகளில் மலை காய்கறி விவசாயத்தில் ஈடுபடும் சிறு, குறு விவசாயிகளுக்கு தெளிப்பு நீர் பாசன கருவி வழங்க பயனாளிகள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். இதில் ஒரு ஏக்கர் நிலத்தின் பயன்பாட்டுக்கு 18 பைப்கள் கொண்ட

தெளிப்பு நீர் பாசன கருவியும், 2.5 ஏக்கர் நிலத்தின் பயன்பாட்டுக்கு 30 பைப்கள் கொண்ட கருவியும், 5 ஏக்கர் நிலத்தின் பயன்பாட்டுக்கு 41 பைப்கள் கொண்ட கருவிகள் வழங்கப்பட உள்ளன.
முதற்கட்டமாக, ஊட்டி ஊராட்சி ஒன்றிய அலுவலக வளாகத்தில் நடந்த நிகழ்ச்சியில், 100 விவசாயிகளுக்கு 20 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் தெளிப்பு நீர் பாசன கருவிகளை ஊட்டி எம்.-எல்.ஏ., புத்திசந்திரன் வழங்கினார்.
ஊராட்சி ஒன்றிய குழு தலைவர் சாந்தி, துணைத்தலைவர் மோகன், மாவட்ட ஊராட்சி துணை தலைவர் பலராமன், தோட்டக்கலை துறை இணை இயக்குனர் மோகன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## கவலைவிலை சரிவால் விவசாயிகள் தக்காளி விளைச்சல் அதிகரிப்பு

பதிவு செய்த நாள் : ஜூலை 30,2012,21:45 IST

பழநி:பழநி சுற்றுவட்டாரத்தில் தக்காளி விளைச்சல் அதிகரித்தும் விலையில்லாததால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர். பழநி, கணக்கன்பட்டி, கலிக்கநாயக்கன்பட்டி, கள்ளிமந்தயம், மானூர், கோதைமங்கலம் உட்பட பல கிராமங்களில் தக்காளி பயிரிட்டுள்ளனர். பழநி மார்க்கெட்டில் சேலம், தஞ்சாவூர்,கும்பகோணம், மதுரை, விருத்தாசலம், கள்ளக்குறிச்சி, செங்கற்பட்டு, சென்னை, திருச்சூர் போன்ற ஊர்களில் இருந்து வியாபாரிகள் கொள்முதல் செய்கின்றனர்.குறைவு: கடந்த வாரம் ஒருபெட்டி (14 கிலோ) ரூ.170 முதல் 200 வரை விற்றது. நேறறு ஒரு பெட்டிரூ.60 முதல் ரூ.70 வரை விற்றது.பழக்கமிஷன் மண்டியை சேர்ந்த ரவிச்சந்திரன் கூறுகையில்,"சில்லரை வியாபாரிகள் ஒரு கிலோ ரூ.12 முதல் 15வரை விற்று அதிக லாபம் அடைகின்றனர். ஆனால் விளைச்சல் அதிகரித்தும் விலை கிடைக்காததால், விவசாயிகள் கவலையடைந்துள்ளனர். சிலர் தக்காளியை பறிக்காமல் செடிகளில் அப்படியே விட்டுள்ளனர்," என்றார்.

## கால்நடைகளுக்கு பசுந்தீவனம் தட்டுப்பாடு

பதிவு செய்த நாள் : ஜூலை 30,2012,22:04 IST

தேவதானப்பட்டி:கண்மாய், ஊரணிகள் வறண்டு கிடப்பதால் மேய்ச்சலுக்கு செல்லும் கால்நடைகளுக்கு பசுந்தீவனம்,தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. பெரியகுளம் தாலுகாவில் விவசாயம் முக்கியத் தொழிலாக உள்ளது.

இதனால் விவசாயம் சார்ந்து கால்நடைகளும் அதிகம் வளர்க்கப்படுகின்றன. தர்மலிங்கபுரம், மறுகால்பட்டி, பொம்மிநாயக்கன்பட்டி உட்பட பல கிராமங்களில் நூற்றுக்கணக்கான கறவைமாடுகள், ஆடுகள் வளர்க்கப்படுகின்றன. இவைகளை நாள்தோறும் காலையில் மேய்ச்சலுக்கு கொண்டு செல்கின்றனர். இவ்வாறு செல்லும் கால்நடைகள் அப்பகுதி நீர்நிலைகளில் தேங்கியுள்ள நீரை குடித்து வந்தன. தற்போது வறட்சி நிலவுவதால் கண்மாய், குளம், ஊரணிகளில் நீர்வற்றி வறண்டு விட்டன. தேவையான பசுந்தீவனங்களும் கிடைக்கவில்லை. இதனால் கால்நடைகள் வளர்ப்போர் கவலையில் உள்ளனர்.

**உரங்களை அதிக விலைக்கு விற்றால் கடும் நடவடிக்கை**

பதிவு செய்த நாள் : ஜூலை 30,2012,22:30 IST

சிவகங்கை:""மாவட்டத்தில், உரக்கடைகளில் விவசாயிகளிடம் அதிக விலைக்கு உரங்களை விற்றால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும்," என, விவசாய இணை இயக்குனர் தட்சிணாமூர்த்தி தெரிவித்தார். அவர் கூறியதாவது: உரக்கடைகள், விவசாயிகளுக்கு வழங்கும் உரங்களை உரிய விலைக்கே வழங்கவேண்டும்.

அதன்படி, யூரியா மூடை (50 கிலோ) ரூ.268, டி.ஏ.பி., ரூ.1,200, 1,202, 1,252. பொட்டாஷ் உரம் மூடை ரூ.800, 815, 840, 846க்கு வாங்கலாம். காம்ப்ளக்ஸ் உரங்களை மூடை ரூ.823, 935, 959க்கு வாங்கவும். சூப்பர் பாஸ்பேட் ரூ.415, அமோனியம் சல்பேட் மூடை ரூ.550க்கு தான் விற்கவேண்டும். விவசாயிகள் மூடைகளில் அச்சிட்டுள்ள விற்பனை விலையை பார்த்து வாங்கவேண்டும். அதிக விலைக்கு உரங்களை விற்றால், உரக்கடைகள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும், என்றார்.

**கார் சாகுபடிக்கு தண்ணீர் திறப்பு இல்லை: நெல்லை மாவட்ட விவசாயிகள் கடும் அதிருப்தி**

பதிவு செய்த நாள் : ஜூலை 31,2012,01:32 IST

திருநெல்வேலி : கார் சாகுபடிக்கு தண்ணீர் திறக்கப்படாததால் நெல்லை மாவட்ட விவசாயிகள் கடும் அதிருப்தி அடைந்துள்ளனர்.
நெல்லை கலெக்டர் அலுவலகத்தில் மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் நடந்தது. இதில் சேரன்மகாதேவி நீரினை பயன்படுத்துவோர் சங்கத்தின் சார்பில் அளிக்கப்பட்ட மனுவில் தெரிவித்துள்ளதாவது:

கன்னடியன் கால்வாயில் கார் சாகுபடிக்கு தண்ணீர் இல்லாததால் பல்லாயிரக்கணக்கான விவசாயிகள் கஷ்டப்படுகின்றனர். கால்நடைகளுக்கு குடிநீர் மற்றும் தீவனங்கள் போதுமான அளவில் கிடைக்கவில்லை. வாழை பயிர் செய்துள்ள விவசாயிகள் தண்ணீரின்றி அவதிப்படுகின்றனர்.
மாவட்டத்தில் பல்வேறு கிராமங்களில குடிநீர் சரியாக வழங்கப்படாததால் நிலத்தடி நீர் மூலம் பயன் பெற்று வருகின்றனர். கன்னடியன் கால்வாயில் பகுதியில் நிலத்தடி நீரும் வற்றி கிணறு, குளங்களும் வறண்டு காணப்படுவதால் குடிநீர் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது.
எனவே, குடிநீர் தேவைக்காகவும், வாழை பயிரை காப்பாற்றவும், நிலத்தடி நீர் உயரவும், கோபாலசமுத்திரம், வீரவநல்லூர் பகுதிகளில் உள்ள குளங்கள் நிரம்பவும் உடனடியாக கால்வாயில் தண்ணீர் திறந்து விட நடவடிக்கை எடுக்க வேண்டும்.
இவ்வாறு அந்த மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
இப்பிரச்னை தொடர்பாக நாளை (இன்று) முதல் தண்ணீர் திறக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று அதிகாரிகள் உறுதி அளித்ததாக, விவசாயிகள் தெரிவித்தனர்.

## துவரை சாகுபடிக்கு அரசு மானியம்

பதிவு செய்த நாள் : ஜூலை 31,2012,01:24 IST

தென்காசி : "துவரை சாகுபடிக்கு அரசு மானியம் வழங்குகிறது' என வேளாண்மை அதிகாரி கூறியுள்ளார்.

தமிழகத்தில் பயிரிடப்படும் பயறு வகை மற்றும் துவரை சாகுபடியில் புதிய தொழில் நுட்ப உத்திகளை கடைபிடித்து உற்பத்தியை பெருக்கும் நோக்கில் பல்வேறு திட்டங்களை தமிழக அரசு செயல்படுத்தி வருகிறது. தேசிய உணவு பாதுகாப்பு திட்டத்தில் துவரையில் உயர் தொழில் நுட்பம் கடைபிடிக்கப்பட்டு தொகுப்பு செயல் விளக்க திடல் அமைக்கப்படுகிறது.

இதன்படி செங்கோட்டை வட்டாரம் ஆய்க்குடி, சாம்பவர்வடகரை, கிளாங்காடு, கம்பிளி, அச்சன்புதூர் பகுதிகளில் தொகுப்பு செயல்விளக்க திடல் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. துவரை சாகுபடிக்கு அரசு மானியம் வழங்குகிறது. பாசன வசதியுள்ள துவரை சாகுபடிக்கு விருப்பமுள்ள விவசாயிகள் தங்கள் பகுதி உதவி வேளாண்மை அலுவலர்களையோ அல்லது செங்கோட்டை துணை வேளாண்மை அலுவலரையோ தொடர்பு கொண்டு பயன்பெறலாம் என விவசாயிகளை செங்கோட்டை வேளாண்மை உதவி இயக்குநர் பாலசுப்பிரமணியன் கேட்டுக் கொண்டுள்ளார்.

---

தினகரன்

விவசாயிகளுக்கு 50 % மானியத்தில் வேளாண் கருவிகள்

பதிவு செய்த நேரம்:2012-07-30 10:46:47

விராலிமலை, : விராலிமலையில் நடந்த உழவர் பெருவிழாவில் 50 சதவீத மானியத்தில் விவசாயிகளுக்கு வேளாண் கருவிகளை எம்எல்ஏ விஜயபாஸ்கர் வழங்கினார்.
விராலிமலையில் உழவர் பெருவிழா நேற்று நடந்தது. மாவட்ட வேளாண்மை துணை இயக்குனர் சதானந்தம் தலைமை வகித்தார். ஒன்றியக்குழு தலைவர் சுப்பையா முன்னிலை வகித்தார். தோட்டக்கலை உதவி இயக்குநர் முத்தையா வரவேற்றார். விவசாயிகளுக்கு 50 சதவீத மானியத்தில் வேளாண் இயந்திரங்கள் மற்றும் இடுபொருட்களை எம்எல்ஏ விஜயபாஸ்கர் வழங்கினார்.
வேளாண்மை உதவி இயக்குநர்(பொ) முருகேசன், ஒன்றியக்குழு துணைத்தலைவர் திருமூர்த்தி, அட்மா திட்ட விவசாயிகள் ஆலோசனை குழுத்தலைவர் பழனியாண்டி, ஊராட்சி தலைவி லீலாவதி கணேசன், கவுன்சிலர்கள் மணிமாலா செந்தில், கிருஷ்ணன், பெரியசாமி, அம்மன் சேகர், கவுன்சிலர்கள் கருப்பையை, மருதை மற்றும் ஜோதிவேல் கலந்துகொண்டனர். வட்டார தொழில்நுட்ப மேலாளர் முத்துச்செல்வி நன்றி கூறினார்.